
தினமணி

## விலை சரியும் மாம்பழம்; உயரும் சாத்துக்குடி

First Published : 23 Apr 2012 02:24:29 AM IST





சென்னை, ஏப். 22: மாம்பழ சீசன் துவங்கியுள்ளதை அடுத்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு மாழ்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை குறைந்து வருகிறது.

அதே நேரத்தில் கோடை வெயில் அதிகரித்துள்ளதால் சாத்துக்குடி, கமலா ஆகிய பழங்கள் விலை அதிகரித்துள்ளன.

கோடை என்றாலே வெப்பத்தையும் தாண்டி மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடியது மாம்பழ சீசன். மார்ச் இறுதியில் இருந்தே கோயம்பேடு மார்க்கெட்டில் மாம்பழம் விற்கப்படுகிறது.

மாம்பழம் விலை குறைவு: ஆரம்பத்தில் குறைவான ரகங்கள் இருந்ததுடன் விலையும் அதிகமாக இருந்தது. இப்போது மாம்பழம் வரத்து அதிகரித்து வருவதால் விலை குறைந்து வருகிறது. ஆரம்ப விலையாக ஒரு கிலோ இமாம் பசந்த் ரூ. 120, பைங்கனபள்ளி 70, செந்தூரா 45, அல்போன்சா 120 என விற்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி ஒரு கிலோ இமாம் பசந்த் ரூ. 90, அல்போன்சா ரூ. 100, பைங்கனபள்ளி ரூ. 50, செந்தூரா ரூ. 40 என விற்கப்படுகிறது. இன்னும் பல ரகங்கள் வரும் வாரங்களில் கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனைக்கு வரவுள்ளன என வியாபாரிகள் கூறுகின்றனர். இதனால் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.

சாத்துக்குடி விலை அதிகரிப்பு:கோயம்பேடு மார்க்கெட்டிற்கு சாத்துக்குடி, கமலா ஆகிய பழங்கள் பொள்ளாச்சி, நாகர்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வருகின்றன.

குளிர் காலத்தில் சாப்பிட மட்டுமே பெருமளவு பயன்படும் சாத்துக்குடி கோடை காலத்தில் பிரதானமான குளிர்பானமாக விற்கப்படும்.

சில மாதங்களுக்கு முன்பு வரை அதிக விளைச்சல் காரணமாக குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வந்த சாத்துக்குடி, கமலா போன்ற ரகங்கள் இப்போது வரத்து குறைவால் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி (பழைய விலை அடைப்புக் குறிக்குள்) சாத்துக்குடி கிலோ ரூ.40 (20), கமலா ரூ.60 (40), 4 கிலோ எடையுயைட திராட்சை பெட்டி ரூ.130 (110) ஷீட்லெஸ் திராட்சை ஒரு கிலோ ரூ.80 (60), கிர்ணி பழம் கிலோ ரூ.30 (20) என விற்கப்படுகின்றன.

காய் வகைகளில் மாற்றம் இல்லை: கோயம்பேடு மார்க்கெட்டில் காய் வகைகள் கடந்த வார விலையே இப்போதும் விற்கப்படுகின்றன. விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏதும் இல்லை.

ஒரு கிலோ கோஸ் ரூ.15, கத்திரி ரூ.10, வெண்டை ரூ.15, கேரட் ரூ.18, பீட்ரூட் ரூ.14, மிளகாய் ரூ.16, அவரை ரூ.20, பீன்ஸ் ரூ.40, சாம்பார் வெங்காயம் ரூ.15, பெரிய வெங்காயம் ரூ.10, உருளை ரூ.15 ஆகிய விலைக்கு விற்கப்படுகிறன்றன.

## "பவர் டில்லர்: தேவைப்படுவோர் விண்ணப்பிக்கலாம்'

First Published : 23 Apr 2012 08:39:10 AM IST

சிவகங்கை, ஏப். 22: பவர் டில்லர் வாங்க விரும்பும் விவசாயிகள், அதற்கு விண்ணப்பித்தால் வாங்கித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜகோபால் கூறினார்.

சிவகங்கையில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் அவர் கூறியதாவது:

பல விவசாயிகள் நேரடியாக நெல்லை விதைக்கின்றனர். அவ்வாறு விதைக்கும்போது, நெல் நிலத்தின் மேற்பரப்பில் இருக்கிறது. அதை பறவைகள் போன்றவை உண்ண வாய்ப்பு உள்ளது. இயந்திரங்கள் உதவியுடன் நெல் விதைக்கும்போது, ஆழத்தில் விதைக்கப்படுகிறது. இதனால் பறவைகளால் ஏற்படும் சேதம் குறையும். வரிசைப்படி நடவு செய்ய முடியும். களை எடுக்க வசதியாக இருக்கும். மழைக்காலங்களில் மழையை எதிர்பார்த்து நெல் விதைக்கப்படுகிறது. விவசாயிகள் தண்ணீர் வரத்தை திட்டமிட்டு பயிர் செய்ய வேண்டும். பல இடங்களில் வரத்துக் கால்வாய் சரியில்லாததால், தண்ணீர் கண்மாய்க்கு போய்ச் சேரவில்லை. எனவே, விவசாயத்தைத் தொடங்கும் முன்பே, அந்தப் பகுதி வரத்துக் கால்வாய்களை சரிசெய்ய எந்த துறையை அணுக வேண்டுமோ அணுகி, தண்ணீர் வரத்தை உறுதி செய்து பிறகு பயிர் செய்ய தொடங்க வேண்டும்.

நெல் விதைப்புக் கருவி, கடந்த ஆண்டில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டன. இந்த ஆண்டும் வழங்கப்படும். அந்தப் பகுதிகளில் என்னென்ன கருவிகள் தேவையென விவசாயிகள் கருதுகிறீர்களோ கூட்டுறவுச் செயலாளரை அணுகி விண்ணப்பித்தால், அவர்கள் அவற்றை வாங்க நடவடிக்கை எடுப்பர். அதற்கான நிதி மே மாதத்தில் வந்துவிடும்.

மேலும் பவர் டில்லர், மினி டிராக்டரை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்த வேண்டும். இப்போது 47 பவர் டில்லர்களை வாங்கிக் கொடுத்துள்ளோம். உங்களுக்கு தேவையான கருவிகள் குறித்து உழவர் பெருவிழாவில் தெரிவித்தால் வாங்கித் தர நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க வேண்டும் என்றார்.

### தென்பெண்ணையாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்புக் கூட்டம்

First Published : 22 Apr 2012 01:25:42 PM IST

திருவண்ணாமலை, ஏப். 21: தென்பெண்ணையாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பின், திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 22) நடைபெறுகிறது.

கர்நாடக மாநிலம், ஒசகோட்டா-ஓரத்தூர் பகுதிகளைச் சேர்ந்த 160 ஏரிகளுக்கு தென்பெண்ணை ஆற்று நீரை திருப்பும் திட்டத்தை கர்நாடக அரசு செயல்படுத்த முயன்று வருகிறது. இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் சாத்தனூர் அணையின் நீர்த் தேக்கப் பகுதிக்கு நீர்வரத்து தடுக்கப்படும். திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும். சாத்தனூர் அணையின் இடதுபுற, வலதுபுற அணை ஆயக்கட்டு விவசாயிகளின் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் நில சாகுபடி முற்றிலும் பாதிக்கப்படும்.

எனவே, கர்நாடக அரசின் இத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த தென்பெண்ணை ஆற்று பாசன விவசாயிகள் மற்றும் பொதுமக்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை எடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, தென்பெண்ணையாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பின் முதல் ஆலோசனைக் கூட்டம் திருவண்ணாமலை-திருக்கோவிலூர் சாலையில் உள்ள சுபலட்சுமி திருமண மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 22) காலை 10 மணிக்கு நடைபெறுகிறது என்று அக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

### பொங்கலூரில் புகையிலை விளைச்சல் குறைவு

First Published : 22 Apr 2012 12:46:16 PM IST

பல்லடம், ஏப். 21: பொங்கலூர் பகுதியில் புகையிலை விளைச்சல் குறைந்துள்ளது. மேலும், விலை சரிவால் வியாபாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பொங்கலூர் பகுதியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை புகையிலை விவசாயம் அமோகமாக நடைபெற்று வந்தது. கொடுவாய் பகுதியில் புகையிலை குடோன்களும் ஏராளமாக இருந்தது. அங்கு புகையிலை பதப்படுத்தப்பட்டு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரள

போன்ற வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்பட்டன. புகையிலை வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டதால், இத்தொழில் நலிவடைந்துள்ளது. பூச்சி தொல்லை, அதிக பராமரிப்பு உரிய விலையின்மை உள்ளிட்ட காரணங்களினால், புகையிலை சாகுபடி செய்வதை பெரும்பாலான விவசாயிகள் தவிர்த்து வருகின்றனர்.

பாரம்பரிய குடும்பத் தொழிலாக செய்து வருபவர்கள், முழுவதும் கைவிட முடியாமல், சீசன் காலத்தில் தென்மாவட்டங்களுக்குச் சென்று பச்சை புகையிலைகளை வாங்கி வந்து பதப்படுத்தி விற்பனை செய்கின்றனர். பச்சை புகையிலை டன் ரூ.5,500 ஆக உள்ளது. பதப்படுத்தப்பட்ட புகையிலை தண்டு பகுதி கிலோ ரூ.150, இலை கிலோ ரூ.35-க்கும் விற்பனையாகிறது.

பொதுமக்களிடம் ஏற்பட்ட புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வால், புகையிலை விற்பனை மந்தம் அடைந்துள்ளது. மூலப்பொருட்களின் விலை உயர்வாலும் புகையிலை சார்ந்த பொருட்கள் விற்பனை சரிவடைந்து வருகிறது.

இதுகுறித்து புகையிலை வியாபாரிகள் கூறியது:

ஒரு காலத்தில் கொடுவாய் புகையிலை உலக பிரசித்தி பெற்று திகழ்ந்தது. ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது. கொடுவாயில் 50-க்கும் மேற்பட்ட குடோன்கள் இருந்தன. தொழில் நசிவால் மேற்கொண்டு தொழில் செய்ய முடியாமல் பலர் குடோன்களை, வேறு தொழில்களுக்கு வாடக்கைக்கும், குத்தகைக்கும் விட்டுள்ளனர். தற்போது விரல் விட்டு எண்ணும் அளவிற்கு புகையிலை குடோன்கள் செயல்பாட்டில் உள்ளன.

## முட்டை விலை 5 காசு உயர்வு

First Published : 22 Apr 2012 02:12:39 PM IST

நாமக்கல், ஏப்.21: நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை 5 பைசா உயர்த்தப்பட்டு ரூ.2.35 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் சனிக்கிழமை நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆழ்கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து தேசிய அளவில் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. இதைத் தொடர்ந்து முட்டை விலையும் உயர்ந்து வருகிறது.

அதனடிப்படையில், கடந்த வியாழக்கிழமை (ஏப்.19) நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை 5 பைசா உயர்த்தப்பட்டு ரூ.2.30ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக, சனிக்கிழமை மீண்டும் 5 பைசா உயர்த்தப்பட்டு ரூ.2.35 என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல், நாடு முழுவதும் பல நகரங்களிலும் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, முட்டை விலை சென்னையில் ரூ.2.37, ஹைதராபாத் ரூ.2.09, விஜயவாடாவில்

ரூ.2.07, மும்பையில் ரூ.2.41, மைசூரில் ரூ.2.28, பெங்களூரிஸ் ரூ.2.33, கொல்கத்தாவில் ரூ.2.45, தில்லியில் ரூ.2.34 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**குன்னூர் தேயிலை ஏலத்தில் ரூ.10.31 கோடி கூடுதல் வருவாய்**

ஏப்ரல் 23,2012,00:19



குன்னூர்:குன்னூர் தேயிலை ஏல மையத்தில், சென்ற மார்ச் வரையிலான மூன்று மாதங்களில், 10.31 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.குன்னூர் "கோத்தாரி' வேளாண் மேலாண்மை மையத்தில், தேயிலை கருத்தரங்கு மைய இயக்குனர் தலைமையில் நடைபெற்றது. இதில், சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் பேசியதாவது;

குன்னூர் தேயிலை ஏல மையத்தில், கடந்த ஜனவரி-மார்ச் வரையிலான காலாண்டில், 13 முறை நடைபெற்ற ஏலத்தில் மொத்தம், 1.22 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.விற்பனையான தேயிலை தூளுக்கு சராசரி விலையாக, கிலோவுக்கு 71.25 ரூபாய் விலை கிடைத்தது. கடந்த ஆண்டு, இதே காலத்தில், 1.06 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டு, சராசரி விலையாக கிலோவுக்கு, 72.28 ரூபாய் கிடைத்தது. நடப்பு ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், தேயிலை ஏலம் வாயிலாக, 86.93 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டு, இதே காலகட்டத்தில், 76.62 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டின் முதல் காலாண்டில், 10.31 கோடி ரூபாய் கூடுதலாக வருவாய்

கிடைத்துள்ளது.ஏற்றுமதி வர்த்தகத்துக்கு பயன்படுத்தப்படும், "ஆர்தோடாக்ஸ்' ரக தேயிலை தூளின் விற்பனையை பொறுத்தவரை, இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், 8.78 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டது. சராசரி விலையாக கிலோவுக்கு, 80.84 ரூபாய் கிடைத்தது. கடந்தாண்டு இதே காலகட்டத்தில், 8.22 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்கப்பட்டு, சராசரி விலையாக, 84.31 ரூபாய் பெறப்பட்டுள்ளது.கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டு சி.டி.சி., "ஆர்தோடாக்ஸ்' ரக தேயிலை தூளின் வரத்து குறைந்த போதிலும், கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை விலை உயர்ந்ததால், கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது. இவ்வாறு சுந்தர் கூறினார்.

**மத்திய அரசு ரூ.17,300 கோடியில் பால் வள மேம்பாட்டு திட்டம்**

ஏப்ரல் 23,2012,00:16



புதுடில்லி:நாட்டின் பால் மற்றும் பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், மத்திய அரசு, 17ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் தேசிய பால் வள மேம்பாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

**நவீன தொழில்நுட்பம்:** இத்திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட 14 மாநிலங்களில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம், அதிக பால் தரும் கால்நடைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், பால் மற்றும் பால் பொருட்களின் உற்பத்தியை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல் கட்டமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் செயல்படும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து, அடுத்த ஆறு ஆண்டுகளில் 2,242 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.கடந்த 2010-11ம் நிதியாண்டில்,நாட்டின் பால் உற்பத்தி 12.28 கோடி டன்னாக இருந்தது. வரும் 2021-22ம் நிதியாண்டில், நாட்டின் பாலுக்கான தேவை 7 சதவீதம் அதிகரித்து 20 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பால் உற்பத்தி ஆண்டுக்கு 4 சதவீதம் என்ற அளவிற்கே வளர்ச்சி கண்டு வருகிறது. இதை கருத்தில் கொண்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2005-06ம் நிதியாண்டில், தேசிய அளவில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் நாளொன்றுக்கு, 2.15 கோடி லிட்டர் பால் கொள்முதல் செய்தன. இது, 2009-10ம் நிதியாண்டில் 20.6 சதவீதம் வளர்ச்சி கண்டு 2.59 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது.இதே ஆண்டுகளில், குஜராத் மற்றும் கர்நாடக மாநில கூட்டுறவு சங்கங்களின் பால் கொள்முதல் 35 சதவீதம் அதிகரித்து, 94 லட்சம் லிட்டரில் இருந்து, 1.27 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது. இதர மாநிலங்களின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் பால் கொள்முதல், 9.3 சதவீதம் உயர்ந்து, 1.20 கோடி லிட்டரில் இருந்து 1.30 கோடி லிட்டராக அதிகரித்துள்ளது.

இதே ஆண்டுகளில், தனியார் பால் நிறுவனங்களின் பால் கொள்முதல் 90 சதவீதம் வளர்ச்சி கண்டு நாளொன்றுக்கு 2.1கோடி லிட்டரில் இருந்து, 4 கோடி லிட்டராக உயர்ந்துள்ளது.கூட்டுறவு சங்கங்களை பொறுத்தவரை, நாட்டிலேயே குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (அமுல்) மற்றும் கர்நாடகா பால் கூட்டமைப்பு (நந்தினி) ஆகியவை, நாளொன்றுக்கு முறையே 90 லட்சம் லிட்டர் மற்றும் 40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து முன்னணியில் உள்ளன.

**கூட்டுறவு சங்கங்கள்:**தனியார் துறையை பொறுத்தவரை, நெஸ்லே இந்தியா நிறுவனம், பத்தாண்டுகளுக்கு முன்பு நாளொன்றுக்கு 10 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து தனித்து கோலோச்சி வந்தது. இன்று, எட்டு நிறுவனங்கள் இதே அளவில் பால் கொள்முதல் செய்து வருகின்றன. ஆறு நிறுவனங்கள், நாள்தோறும் 5 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கின்றன. இந்நிலையில், தேசிய பால்வள திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களுடன், தங்களையும் இணைத்து செயல்பட வேண்டும் என, தனியார் பால் நிறுவனங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பாக ஓரிரு நாளில், மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவாரை சந்தித்து பேசவும் இந்நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

## சர்வதேச தேயிலை உற்பத்தி 15 கோடி கிலோவாக பிரிவு

ஏப்ரல் 23,2012,00:15



புதுடில்லி:நடப்பாண்டில், இதுவரையில், சர்வதேச அளவில், கருப்பு தேயிலை உற்பத்தி, 15 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில், 15.70 கோடி கிலோவாக இருந்தது என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.ஆக, மதிப்பீட்டு காலத்தில் 70 லட்சம் கிலோ (4.69 சதவீதம்), தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
சென்ற பிப்ரவரி வரையிலுமாக, கென்யாவின் தேயிலை உற்பத்தி, 80 லட்சம் கிலோ குறைந்து, 5.50 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இந்தியாவின், தேயிலை உற்பத்தி, 20.24 லட்சம் கிலோ சரிவடைந்து, 1.95 கோடி கிலோவாக குறைந்துள்ளது.அதேசமயம், இலங்கையின் தேயிலை உற்பத்தி, சென்ற பிப்ரவரி நிலவரப்படி, 20.10 லட்சம் கிலோ உயர்ந்து, 4.53 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது

**மா விளைச்சல் குறைவு: எகிறுது விலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2012,01:14 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி : பழநியில் மா விளைச்சல் குறைந்துள்ளதால், கல்லாமை விலை உயர்ந்துள்ளது.
தொப்பம்பட்டி, நெய்க்காரப்பட்டி, தேக்கந்தோட்டம், சுற்றுப்பகுதியில் மா சாகுபடி நடக்கிறது. கடந்த ஆண்டை விட, விளைச்சல் குறைந்துள்ளது.
இதனால் கடந்தாண்டு கிலோ 10 முதல் 15 வரை விற்கப்பட்ட கல்லாமை தற்போது கிலோ 30 முதல் 45 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பழங்களின் விலையும் உயர்ந்துள்ளது.
விவசாயி மாரியம்மாள் கூறுகையில், ""கடந்த ஆண்டை விட காய்ப்பு மிகவும் குறைந்துள்ளது. மல்கோவா மாம்பழம் கிலோ 90 ரூபாய், செந்தூர் மாம்பழம் 60 ரூபாய், இமாம்பாஸ் 80 ரூபாய் விற்கப்படுகிறது. கல்லாமை கிலோ 30 முதல் 45 வரை விற்கிறோம்,'' என்றார்.

**பீன்ஸ், தக்காளி விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2012,01:18 IST

கருத்தை பதிவு செய்ய

ஒட்டன்சத்திரம் : விளைச்சலின்றி வரத்து குறைந்துள்ளதால் ஒட்டன்சத்திரத்தில் பீன்ஸ், தக்காளி விலை அதிகரித்துள்ளது.
ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஒட்டு ரக தக்காளி அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் வரத்து கணிசமாக அதிகரித்து காணப்பட்டது.

இதனால் 14 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி 10 ரூபாய் வரை விற்றது. அப்போது ஒரு கடைக்கு ஆயிரம் பெட்டிகள் வரை வரத்து இருந்தது.
தற்போது விளைச்சல் இல்லாததால் ஒரு கடைக்கு 100 பெட்டி என்ற அளவில்தான் வரத்து உள்ளது.
தக்காளி செடிகளில் இருந்த பூக்கள் உதிர்ந்து விட்டது. தற்போது "அறுவடை' சீசனாக இருந்த போதிலும் மார்க்கெட்டிற்கு வரத்து மிகவும் குறைவாகவே உள்ளது.
இதன்காரணமாக தக்காளி விலை அதிகரித்துள்ளது.
தற்போது தக்காளி ஒரு பெட்டி(14 கிலோ) 150 ரூபாய்க்கு விற்றது.
இதேபோல் பீன்ஸ் விளைச்சல் குறைவாக உள்ளதால் விலை அதிகமாக உள்ளது. கிலோ 47 ரூபாய்க்கு விற்றது.

## விவசாயிகள் விளைவித்த "மெகா சைஸ்' மரவள்ளிக்கிழங்கு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2012,02:43 IST

கருத்தை பதிவு செய்ய
தேவாரம் :தேனி மாவட்டத்தில் விவசாயி விளைவித்த,"மெகா சைஸ்' மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் ஆச்சர்யத்துடன் பார்த்து சென்றனர்.
தேவாரம் பகுதியில் 2 ஆயிரத்து 500 ஏக்கரில், மரவள்ளி கிழங்கு சாகுபடி நடக்கிறது.
ஜவ்வரிசி மில்களில் மொத்த விலைக்கு வாங்குவதால் நல்ல லாபம் கிடைக்கிறது. மரவள்ளி கிழங்கை மதிப்பு கூட்டி "வாட்டு கப்பை'யாக கேரளாவிற்கு அனுப்புகின்றனர்.
நேற்று, டி.மீனாட்சிபுரம் குமரவேல் தோட்டத்தில் கிழங்கு தோண்டப்பட்டது.
அவற்றில் சில கிழங்குகள் 4 அடி உயரம், 7 கிலோ எடையில் இருந்தன. வழக்கத்தை விட மூன்று மடங்கு பெரியதாக இருந்தன.இவ்வளவு எடை, உயரம் உள்ள கிழங்கு இதுவரை இப்பகுதியில் விளையாததால் அருகில் உள்ள விவசாயிகள் ஆச்சர்யத்துடன் பார்த்து சென்றனர்.

## நீலகிரியில் குறைந்தது மழையளவு தேயிலை மகசூலில் விழுந்தது "அடி'

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2012,04:24 IST

குன்னூர் : நீலகிரியில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்களால், தேயிலை தோட்டங்களில் மகசூல் குறையத் துவங்கியுள்ளது; தேயிலை செடிகளை தாக்கும் சிவப்பு நிற சிலந்திகளால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மலை மாவட்டமான நீலகிரியில், பருவம் தவறாமல் பெய்யும் மழையே, மாவட்ட பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் தேயிலை தொழிலுக்கு மூலதனம்; ஆண்டு முழுவதும் விளையும் பணப்பயிரான பசுந்தேயிலை, மழை நீரில் நனைந்தால் மட்டுமே தோட்டங்களில் இடப்படும் உரம், மருந்துகள், தேயிலை செடிகளுக்கு உயிர் கொடுக்கும்.

கோடை காலமான ஏப்ரல் - மே மாதங்களில் வெயில் வாட்டினாலும், அவ்வப்போது பெய்யும் கோடை மழை, தேயிலை தோட்டங்களின் மகசூலுக்கு உதவும். இக்கால கட்டங்களில் தான், விவசாயிகள் தோட்டங்களுக்கு உரமிடுவர்; மகசூல்அதிகரிக்கும்; வருமானம் பெருகும்.

கோடை காலமான தற்போது எதிர்பார்த்த மழை கிடைக்காததால், தேயிலை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

"உபாசி' தேயிலை ஆராய்ச்சி மைய அதிகாரி உதயபானு கூறுகையில், ""கடந்தாண்டு ஜனவரி - ஏப்ரல் மாதத்தில், குன்னூரில் 288.7 மி.மீ., மழை பெய்தது; நடப்பாண்டு 116.2 மி.மீ., மழை பெய்துள்ளது.

நான்கு மாதங்களில் மழையளவு குறைந்ததால், தேயிலை மகசூலில் 15 சதவீதம் குறைந்துள்ளது; மழை ஏமாற்றினால், மேலும் 10 சதவீத மகசூல் குறைய வாய்ப்புள்ளது,'' என்றார்.

தேயிலை விவசாயிகள் சிலர் கூறுகையில், "கடந்தாண்டுகளில் தேயிலை செடிகளுக்கு தேவையான உரங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருந்தது; போதிய மழை பெய்தும் உரம் கிடைக்காததால், தோட்டங்களை பராமரிக்க முடியவில்லை; நடப்பாண்டு, தடையின்றி உரம் கிடைத்தாலும் மழை ஏமாற்றியதால், தோட்டங்களுக்கு உரமிட முடியாத நிலையில் உள்ளோம்,' என்றனர்.

வெயிலால், தேயிலை தோட்டங்களில் உள்ள செடிகளை சிவப்பு நிற சிலந்திகள் தாக்க துவங்கியுள்ளன. சிலந்தி தாக்குதல் தோட்டங்களில் வேகமாக பரவும் தன்மை கொண்டதால், பல ஏக்கர் தேயிலை தோட்டங்கள் பாதிக்க துவங்கியுள்ளன; இதுவும் மகசூல் குறைவுக்கு ஒரு காரணமாக மாறியுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நீலகிரியில் ஒவ்வொரு ஆண்டும், காலநிலையில் பல மாற்றங்கள் தென்பட துவங்கியுள்ளன. இதனை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியது அவசியம்.

## விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்யலாம் வேளாண் இணை இயக்குனர் "அட்வைஸ்'

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 23,2012,06:09 IST

புதுக்கோட்டை: "புதுக்கோட் டை மாவட்டத்தில் சம்பா அறுவடை செய்துள்ள விவசாயிகள் அந்த நிலங்களில் உளுந்து பயிர்களை சாகுபடி செய்து பயனடையலாம்' என வேளாண்மைத்துØ ற அறிவுரை வழங்கியுள்ளது.புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குனர் எம்பெருமாள்

வெளியிட்ட அறிக்கை:புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்தாண்டு மழை பொய்த்துவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் ஏப்ரல் வரை 22 முதல் 25 மி.மீ., வரை சராசரி மழை பெய்வது வழக்கம்.
இந்தாண்டு இதுவரை மழை பெய்யவில்லை. இதனால் நீர்நிலைகள் அனைத்தும் தண்ணீர் இன்றி வறண்டு போய் உள்ளது.

எனவே, சம்பா நெல் அறுவடை முடித்துள்ள விவசாயிகள் அந்த நிலத்தில் ஈரப்பதம் காய்வதற்கு முன்னால் கோடை பருவ பயிராக உளுந்து பயிரினை சாகுபடி செய்யலாம்.
இதன்மூலம் குறைந்த செலவில் அதிக வருவாய் கிடைப்பதோடு, மண் வளமும் மேம்படும்.

விவசாயிகளுக்கு கோடை கா ல சாகுபடிக்கு தேவையான தரமான பயறுவகை விதைகள் போ திய அளவு இருப்பு வைக்கப்ப ட்டு வேளாண் விரிவாக்க மைய ங்கள் மற்றும் உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை மை யங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

இதுபோன்று உர வகைகளும் போதிய அளவு இரு ப்பு வைக்கப்பட்டுள்ளது. டி.ஏ. பி., 1,046 மெ.டன், யூரியா 4,283 மெ.டன், பொட்டாஷ் 2,585 மெ .டன், காம்பளக்ஸ் 6,427 மெ.ட ன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

சம்பா நெல் அறுவடையைத் தொடர்ந்து குறுவை நெல் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் வயல்வெளிகளில் மண் பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

இதற்காக மண் மாதிரிகளை சேகரித்து அவற்றை ரூ.20 ஆய்வு கட்டணத்துடன் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் கொடுத்தால் மண் பரிசோதனை அறிக்கை கிடைக்கும்.

மண் வளத்துக்கு ஏற்றவாறு பயிர்கள் சாகுபடி செய்வதன் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம்.

---

**மார்ச் காலாண்டில் வருவாய் உயர்ந்துள்ள நிலையில் மானியம் குறைப்பு உள்ளிட்ட இடர்பாடுகளால் உர நிறுவனங்கள் எதிர்கொண்டு வரும் சவால்கள்**



பாருல் பட்நாகர்
இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மானியம் குறைப்பு உள்ளிட்ட இடர்பாடுகளால் நடப்பு நிதி ஆண்டில் உர நிறுவனங்கள் பல்வேறு சவால்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. இதனால் இவ்வாண்டில் உர நிறுவனங்களின் லாப வரம்பு குறைய வாய்ப்புள்ளது.

யூரியா அல்லாத உரங்கள்

சர்வதேச அளவில் உரங்கள் விலை குறைந்துள்ளதால் நடப்பு நிதி ஆண்டில் யூரியா அல்லாத உரங்களுக்கு மானியத்தை குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால், டீ.ஏ.பி. உரத்துக்கான மானியம் 27 சதவீதம் குறைந்து டன் ஒன்றுக்கு ரூ.14,420–ஆக குறையும் என்றும், பொட்டாஷ் உரத்துக்கான மானியம் 10 சதவீதம் குறைந்து டன்னுக்கு ரூ.14,472–ஆக குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதர உரங்களுக்கு சத்து அடிப்படையில் மானிய விகிதங்கள் குறைக்கப்படலாம்.

மானியம் குறைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக பல நிறுவனங்கள் உற்பத்தி செய்த உரம் முழுவதையும் டீலர்களுக்கு விற்பனை செய்து விட்டன. இதனால் 2012 டிசம்பர் மாதத்தில் டீலர்களிடம் உரம் கையிருப்பு பத்து லட்சம் டன்னாக உயர்ந்து விட்டது. இது 2011 டிசம்பர் மாதத்தில் 8 லட்சம் டன்னாக இருந்தது.

கரீப் பருவத்தில்...

பருவமழை நன்றாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக எதிர்வரும் கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) உரங்களுக்கான தேவைப்பாடு அதிகரிக்கும் என்ற மதிப்பீடு உள்ளது. மேலும் உர நிறுவனங்கள் டீலர்களுக்கு அதிக அளவு கமிஷன் வழங்குவதுடன், ஆறு மாத கால அவகாசத்தில் கடனுக்கு உரங்களை வழங்குகின்றன.

அதே சமயம் இத்தகைய இடர்பாடுகளால் உர நிறுவனங்களின் மார்ச் காலாண்டு நிதி நிலை முடிவுகளில் பாதிப்பு ஏற்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அக்காலாண்டில் உரங்கள் விற்பனை நன்றாக இருந்தது. குறிப்பாக கலப்பு உரங்களின் விற்பனை 30 சதவீதம் உயர்ந்து 28

லட்சம் டன்னை எட்டியுள்ளது. டீ.ஏ.பி. உரம் விற்பனை இரண்டு மடங்கு உயர்ந்து 31 லட்சம் டன்னாக உள்ளது. பொட்டாஷ் விற்பனை 30 சதவீதத்திற்கு மேல் வளர்ச்சி கண்டு 28 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. உரங்கள் விற்பனை அதிகரித்ததால் பல நிறுவனங்களின் வருவாய் சிறப்பான வளர்ச்சி கண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த வளர்ச்சியை இனி வரும் காலாண்டுகளில் தக்க வைக்க முடியுமா என்பது சர்ச்சைக்குரியதாக உள்ளது. மானிய குறைப்பு தவிர உர நிறுவனங்கள் வேறு பல முக்கிய பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளன. ரூபாய் மதிப்பில் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள், முக்கிய மூலப்பொருளான பாஸ்போரிக் அமிலம் போதிய அளவு கிடைக்காதது, மொத்த விற்பனையாளர்களிடம் உரம் கையிருப்பு அதிகமாக உள்ளது போன்றவை அவற்றில் மிக முக்கியமானவையாகும். கையிருப்பு அதிகமாக உள்ளதால் இனி வரும் மாதங்களில் டீலர்கள் நிறுவனங்களிடம் உரம் வாங்குவதை தவிர்க்க வாய்ப்புள்ளது. இதனால் நிறுவனங்களின் விற்பனை பாதிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக உற்பத்தியும் சரிவடைய வாய்ப்புள்ளது.

பாஸ்போரிக் அமிலம்

உர நிறுவனங்கள் லாப வரம்பை நிலைநிறுத்த வேண்டுமானால் பாஸ்போரிக் அமிலம் குறைந்த விலையில் தாராளமாக கிடைக்க வேண்டும். இன்றைய நிலவரப்படி பல நிறுவனங்கள் இதற்காக சர்வதேச சப்ளையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு வருகின்றன. ஆனால் சப்ளைக்கான ஒப்பந்தங்களை புதுப்பிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் மற்றும் ரூபாய் மதிப்பில் சரிவு போன்றவற்றால் உர உற்பத்தியாளர்கள் லாப வரம்பை அதிகரிக்க முடியாத சூழல் ஏற்படலாம்.

இந்த நிலையில் உரத் துறை தொடர்பாக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இத்துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு நீண்ட கால அடிப்படையில் நல்ல பலன்களை அளிக்கக் கூடும். உதாரணமாக உரத் துறையினருக்காக நிதியம் ஒன்றை உருவாக்க உர அமைச்சகம் நிதி அமைச்சகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது. உர உற்பத்திக்கு தேவையான கனிமங்களை எளிதாக பெறும் வகையில் வெளிநாடுகளில் சுரங்கங்களை கையகப்படுத்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இந்த நிதியம் உதவும்.

திட்டக் குழு யோசனை

இந்த நிதியத்திற்கு 2,000 கோடி டாலர் தேவைப்படும் என இந்திய உர நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர் ஏ.வெள்ளையன் தெரிவித்தார். தொடக்கத்தில் 1,000 கோடி டாலருடன் இந்த நிதியத்தை உருவாக்கலாம் என திட்டக் குழு யோசனை தெரிவித்துள்ளது. தற்சமயம் 500 கோடி டாலரில் இது தொடங்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கனடா, வட ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பொட்டாஷ் உரத்தை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை உர அமைச்சகம் ஆராய்ந்து வருகிறது. இந்த நாடுகளைச் சேர்ந்த பொட்டாஷ் உர நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் ஆதரவு அளித்துள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் இந்திய உர நிறுவனங்களுக்கு வளமான வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உரங்கள் தேவைப்பாடு

நம் நாட்டில் உரங்களுக்கான தேவைப்பாடு மிக அதிகமாக உள்ளது. எனவே உரங்கள் இறக்குமதியும் அதிகமாக உள்ளது. டீ.ஏ.பி. உரத்தைப் பொறுத்தவரை நாட்டின் மொத்த தேவையில் 50 சதவீதம் இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்யப்படுகிறது. எம்.ஓ.பி. உரமோ தேவைப்படும் மொத்த அளவும் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியா ஆண்டுதோறும் யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்களை தலா 60 லட்சம் டன் இறக்குமதி செய்கிறது. டீ.ஏ.பி. 70 லட்சம் டன் இறக்குமதி செய்யப்படுகிறது.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை உயர்வு

குன்னூர், ஏப்.23–
குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை உயர்வு ஏற்பட்டது. மேலும் 92 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

ஏலம்

வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை வர்த்தகர் கழகத்தினர் நடத்தும் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கு கொள்கின்றனர். விற்பனை எண் 16–க்கான ஏலம் கடந்த 19, 20 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

ஏலத்திற்கு மொத்தம் 8 லட்சத்து 76 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இந்த ஆண்டில் நடைபெற்ற 15 ஏலங்களில் வந்த தேயிலை தூளின் மொத்த அளவில் 16–வது ஏலத்திற்கு வந்த தேயிலை தூளின் அளவு மிகவும் குறைவாக இருந்தது.

92 சதவீத தேயிலை தூள் விற்பனை

விற்பனை எண் 16–க்கான மொத்த தேயிலை தூளின் அளவில் 6 லட்சத்து 38 கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 38 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் அதிகள வில் பங்குபெற்றனர்.

தேயிலை வரத்து குறைவாக இருந்ததால் 92 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது.
அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 2 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது.

ஆர்த்தோடக்ஸ்

சி.டி.சி. ரக தேயிலை தூள் 167 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது. 246 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக இருந்தது.சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 54 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 95 ரூபாயில் இருந்து 167 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 60 ரூபாயில் இருந்து 66 ரூபாய்வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 126 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.விற்பனை எண் 17–க்கான ஏலம் வருகிற 26, 27 ஆகிய தேதிகளில் நடக்கிறது.
ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 51 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.